Under Section 173 BNSS"

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101997

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 3/2024 Date: நாள் 08/07/2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act - 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 6/7/2024 Date to : நாள் வரை -
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Morning Time to : நேரம் வரை hrs. 12.10 வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.07.2024 Time : நேரம் 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் II Volume Time : நேரம் 6/7/24 @ 09.30 hrs. 08/7/24 @ 07.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 47 km North East
Beat Number : முறைக் காவல் எண் Sholinghur to Arakkonam Road. (b) Address : முகவரி Vedal, Near Gandhi Nagar Bus stop, Arakkonam Tk, Ranipet District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Booma (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Vaikuntam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4/6/72 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் Dy. Inspection cell officer (g) Address : முகவரி District Inspection Cell office, Collectorate Campus, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. V. Thabandhiran, Deputy Director of Agriculture, PA to Collector (Agri). Joint Director (Agri) Incharge Ranipet District (2) Tr. S. Elavarasan, Assistant, O/o the Joint Director of Agriculture, Ranipet.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Due to some urgent personal work she went on leave hence delay.

* GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 8/7/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 08/07/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08-07-24 @ 11.30hrs.

Name: பெயர் V. Ganesan
Rank: நிலை Dy. Superintendent of Police எண் ..........
VBAC, Ranipet.

| எதிரிகள்: | பணிந்து அனுப்பப்படுகிறது: |
|---|---|
| 1) திரு.V.தபேந்திரன் (59/2024), த/பெ வெள்ளையா, வேளாண்மை துணை இயக்குனர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை), வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராணிப்பேட்டை,<br><br>2) திரு.S.இளவரசன் (38/2024), த/பெ சுப்பிரமணி, உதவியாளர், வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராணிப்பேட்டை. | இன்று 08.07.2024 ஆம் தேதி காலை 07.00 மணியளவில், V.கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.V.பூமா அவர்கள் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி |

கொடுத்த புகார் மனுவை பெற்று பார்க்க, நாள்: 08.07.2024 அனுப்புநர்: V.பூமா, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், (இருப்பு) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அய்யா, பொருள்:இருதுறை திடீர் கூட்டு சோதனை - அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை - நடவடிக்கை எடுத்தல் வேண்டி - மனு. பார்வை: மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ந.க.எண். S2/231/2024. நாள்: 08.07.2024 இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், C-Block 3rd Floor-ல் இயங்கி வரும் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் வேளாண்மை இணை இயக்குனர் பொறுப்பை கவனித்து வரும் வேளாண்மை துணை இயக்குனர் இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள புஞ்சை நிலங்களை விவசாயம்

அல்லாத பிற பயன்பாட்டிற்காக /குடியிருப்பு மனைப்பிரிவுகளாக மாற்ற கள ஆய்வு செய்து தடையில்லா சான்றினை வழங்க சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்களிடமிருந்தும் அவர்களை கட்டாயப்படுத்தி அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப்பில் சம்மந்தப்பட்ட இடத்திற்கு சென்று இலஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், 06.07.2024 ஆம் தேதி காலை அரக்கோணம் மார்கமாக களஆய்வு செய்து லஞ்சப்பண வசூலில் ஈடுபடவிருப்பதாகவும், ஏற்கனவே வசூல் செய்து வைத்திருந்த லஞ்சப்பணத்தையும் எடுத்துக்கொண்டு, அன்றைய களஆய்விற்கு பிறகு சென்னையில் உள்ள அவருடைய வீட்டிற்கு செல்லவிருப்பதாகவும் எனக்கு 06.07.2024 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலை, நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்களுக்கு சுமார் 09.30 மணிக்கு தகவல் தெரிவித்தேன். எனது தலைமையில், இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்களும், இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு குழுவினரும் அரசு வாகனத்தில் 10.30 மணிக்கு புறப்பட்டு, அரக்கோணம்-சோளிங்கர் மார்கமாக மேற்படி வேளாண்மை இணை இயக்குனர் அவர்களின் அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப்பை தேடி அரக்கோணம், தண்டலம், வேடல் வழியாக சோளிங்கர் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, வேடல் காந்தி நகர் பேருந்து நிறுத்தத்திற்கு சற்று தொலைவில் அமைந்துள்ள அழகர் நகர் மனைப்பிரிவிற்கு எதிரில் மேற்படி அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப் அரக்கோணம் நோக்கி வந்து கொண்டிருந்ததை அசம்பாவிதம் ஏதும் நேராமல் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அரசு வாகனத்தால் தடுத்து நிறுத்தி 12.10 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. 06.07.2024 ஆம் தேதி பகல் 12.10 மணியளவில் வேடல் காந்தி நகர் பேருந்து நிறுத்தத்திற்கு சற்று தொலைவில் அமைந்துள்ள அழகர் நகர் மனைப்பிரிவிற்கு எதிரில்

மேற்படி அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப்பை தடுத்து நிறுத்தி, நானும், துணை காவல் கண்காணிப்பாளா திரு.கணேசன் மற்றும் குழுவினருடன் சென்று, TN-73-G-0136 பொலிரோ ஜீப்பை பார்த்தபோது அந்த ஜீப்பில் ஓட்டுனர் மற்றும் இரண்டு நபர்கள் உட்கார்ந்திருந்தனர். அந்த ஜீப்பின் ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் தபேந்திரன் என்றும், தான் இராணிப்பேட்டை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும், இணை இயக்குனர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வருவதாகவும் சொன்னார். நானும், துணை காவல் கண்காணிப்பாளரும், வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, எங்களையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, அவர்களிடம் தங்களிடம் பணமோ, பொருளோ ஏதும் இல்லை என்று குழுவினரை சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், ஓட்டுனர் இருக்கையில் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் யுவபிரகாஷ் என்றும், தான் அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப்பின் ஆக்டிங் டிரைவராக பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், ஜீப்பின் பின் இருக்கையில் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் இளவரசன் என்றும், இராணிப்பேட்டை வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர்/வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) அவர்களை திரேக சோதனை செய்ய, அவருடைய இடதுபுற பேன்ட் பாக்கெட்டில் மணிபர்ஸ் இருந்தது. அதை எடுத்து பார்க்க, அதில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திரு.தபேந்திரன் அவர்களிடம் விசாரித்தபோது, அதற்கு அவர் தான் ஒரு இருதய நோயாளியென்றும், தனக்கு Stunt வைத்திருப்பதாகவும், அதனால் அவசர மருத்துவத்தேவைக்காக தான் எப்போதும் ரூ.30,000/- வைத்திருப்பதாகவும் சொன்னார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.26,150/- இருந்தது. அந்த பணம் எவ்வாறு வந்தது என்று மீண்டும் திரு.தபேந்திரன் அவர்களிடம் விசாரிக்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே,

மேற்படி பணத்தில் ரூ.20,000/- கைப்பற்றப்பட்டு, அவரது செலவிற்காக மீதமிருந்த ரூ.6,150/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், திரு.இளவரசன், உதவியாளர் அவர்களை சோதனை செய்ய, அவரது இடதுபுற சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.1,500/- இருந்தது. அந்த பணம் குறித்து, அவரிடம் விசாரிக்க, அவர் தன்னுடைய டூவீலருக்கு பெட்ரோல் போட ரூ.500/- வைத்திருப்பதாக சொன்னார். மீதமுள்ள ரூ.1,000/-ற்கு அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த பணம் ரூ.1,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், ஓட்டுனர் திரு.யுவபிரகாஷ் அவர்களை சோதனை செய்ய, அவரது இடதுபுற சட்டைப் பாக்கெட்டில் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பாாக்க, அதில் 450/- இருந்தது. அந்த பணம் குறித்து, அவரிடம் விசாரிக்க, அவர் அந்த பணத்தை தனது செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூ.450/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவரது வலதுபுற பேன்ட் பாக்கெட்டை சோதனை செய்ய, அதில் 500 ரூபாய் தாள்கள் கத்தையாக இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரூ.5,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது, அவர் அந்த பணத்தை சீட்டு கட்ட வைத்திருப்பதாக சொன்னார். அந்த பணம் எப்படி வந்தது என்று விசாரித்தபோது, அவர் கூறிய விவரம் ஏற்கத்தக்கதாக இல்லாத காரணத்தினால், அந்த பணம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.தபேந்திரன் அவர்கள் பயணித்த அரசு வாகனத்தில் அவருக்கு பின் இருக்கையில் இருந்த சிவப்பு நிற பூப்போட்ட டிராவல் பேக்கை சோதனை செய்ய, அந்த பேக்கின் side zip-ல் பணம் கத்தையாக இருந்தது. உடனே அவர் அந்த பை தன்னுடையது என்றும், ஆனால், அதில் உள்ள பணம் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சொன்னார். பின்னர், தன்னுடைய உதவியாளர் திரு.இளவரசன், அவர்களை பார்த்து, யார் அந்த பணத்தை வைத்தது என்று கேட்டார். அதற்கு திரு.இளவரசன் அவர்களும் அந்த பணம் யார் வைத்தது என்று தனக்கும் தெரியாது என்று சொன்னார். பின்னர், அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் மொத்தம் ரூ.80,000/- இருந்தது. யாரும் அந்த

பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறாததால், ரூ.80,000/-கைப்பற்றப்பட்டது. மேற்படி சிவப்பு நிற பூப்போட்ட டிராவல் பேக்கிற்கு பக்கத்தில் ஒரு கருப்பு நிற Back Bag இருந்தது. அது யாருடையது என்று விசாரிக்க, அந்த Back Bag ஆனது தன்னுடையதுதான் என்று திரு.இளவரசன், உதவியாளர் சொன்னார். அந்த Back Bag-யை சோதனை செய்ய, அதில் முன்புற Side Zip-ல் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.20,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திரு.இளவரசன் அவர்களிடம் விசாரிக்க, அந்த பணம் ரூ.20,000/- ஆனது தன்னுடைய Back Bag-ல் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று சொன்னார். அதனால், அந்த பணம் ரூ.20,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி அரசு வாகனத்தை சோதனை செய்ய அதில் பணம் ஏதும் இல்லை. ஆனால், அந்த வாகனத்தின் நடுவில் உள்ள சீட்டில் ஆவணங்கள் இருந்தன. அப்போது 12.18 மணிக்கு மேற்படி திரு.தபேந்திரன் தனக்கு நெஞ்சு வலிப்பதாக சொன்னதால், உடனே அவரை அருகில் உள்ள அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு, சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு செல்லும்போதே, 12.32 மணிக்கு மேற்படி இருதுறை திடீர்சோதனை குறித்த தகவலை நான் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவித்தேன். அப்போது அவருக்கு அரசு மருத்துவர் ECG எடுத்தும், உடல் சோதனை செய்த பின்னர் திரு.தபேந்திரன் சிறிது நேரம் ஓய்வு எடுத்தால் சரியாகிவிடும் என்று சொன்னதால், அங்கேயே சிறிது நேரம் படுக்கையில் இளைப்பாறினார். மீண்டும் மாவட்ட ஆட்சியரகம் அல்லது சம்பவயிடமான வேடல் கிராமத்திற்கு சென்று இருதுறை திடீர் கூட்டுசோதனை குறித்த செயல்முறை செய்ய தாமதமாகும் என்பதாலும், திரு.தபேந்திரன் அவர்களின் உடல்நிலையை கருத்தில் கொண்டும், அரக்கோணம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தில் வைத்து செயல்முறை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, 14.00 மணிக்கு அரசு மருத்துவமனையில் இளைப்பாறிக்கொண்டிருந்த திரு.தபேந்திரன் அவர்கள் தனக்கு

சரியாகிவிட்டது என்று சொன்னபடியாலும், அரசு மருத்துவரும் அவரை அழைத்து செல்லலாம் என்று சொன்னதாலும், திரு.தபேந்திரன் அவர்கள் அரக்கோணம் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். பின்னர், அவரிடம், 06.07.2024 ஆம் தேதியன்று அரக்கோணம் வந்தது குறித்து விசாரிக்க, அவர் நெமிலி வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் பனப்பாக்கம் வேளாண்மை துணைவிரிவாக்க மையம் ஆகிய இடங்களில் பசுந்தாள் விதைகள் விநியோகம் செய்வது குறித்து களஆய்வு செய்யவும், தண்டலம், வேடல், மின்னல் ஆகிய இடங்களில் உள்ள லேஅவுட்களை களஆய்வு செய்வதற்காகவும் வந்ததாக சொன்னார். பின்னர், திரு.தபேந்திரன் அவர்களிடம், அவருடைய அரசு வாகனத்தில் இருந்த ஆவணங்கள் குறித்து விசாரித்தபோது, அவர் தான் 06.07.2024 அன்று அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களான தண்டலம், வேடல், மின்னல் ஆகிய இடங்களில் உள்ள லேஅவுட்களை களஆய்வு செய்வதற்காக எடுத்து வந்திருப்பதாக சொல்லி, அந்த ஆவணங்களை தனது உதவியாளர் திரு.இளவரசன், அவர்கள் மூலம் எடுத்து வரச்சொல்லி கீழ்கண்ட ஏழு ஆவணங்களை ஆஜர்படுத்தினார், 1. திரு.தாமோதரன் என்பவரின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.Q5ZNI62E, நாள்:14.06.2024 (10 தாள்கள்), 2. திரு.தாமோதரன் மற்றும் மூன்று நபர்களின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.53M2SMJJ, நாள்:02.07.2024 (22 தாள்கள்), 3. திரு.ராஜா மற்றும் ஐந்து நபர்களின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.65DIHV8L, நாள்:02.07.2024 (19 தாள்கள்), 4. திரு.விஸ்வநாதன் மற்றும் ஜோதி ஆகியோரின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.10E273EC, நாள்:02.07.2024 (21 தாள்கள்), 5. திரு.விஸ்வநாதன் மற்றும் ஜோதி ஆகியோரின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.00SP5N1N, நாள்:02.07.2024 (22 தாள்கள்), 6. திரு.முகமது அமீன் என்பவரின் ஆன்லைன் தடையில்லா சான்று விண்ணப்பம் எண்.BI5F15CB, நாள்:05.07.2024 (12 தாள்கள்), 7. தடையின்மை அறிக்கை கள ஆய்வுக்காக சமர்பிக்கப்பட்ட கோப்பு எண் ஆ2/3244/2024-ன் அலுவலக குறிப்பு. (1 தாள்)

திரு.தபேந்திரன் அவர்கள் ஆஜர்படுத்திய மேற்படி ஏழு ஆவணங்களின் முதல் மற்றும் கடைசி பக்கங்களில் என்னுடன், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.கணேசன், திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர்/வேளாண்மை இணைஇயக்குனர் (பொறுப்பு), திரு.இளவரசன், உதவியாளர் ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு, அவையனைத்தும் கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.தபேந்திரன், திரு.இளவரசன் மற்றும் திரு.யுவபிரகாஷ் ஆகியோர்களிடம் நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.1,26,000/- மற்றும் 7 ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 06.07.2024 ஆம் தேதி பகல் சுமார் 16.30 மணிக்கு முடிக்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தும் இருதுறை திடீர் கூட்டு சோதனை தயார் செய்யப்பட்டு நானும் திரு.V.கணேசன், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை, திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர்/வேளாண்மை இணைஇயக்குனர் (பொறுப்பு), திரு.இளவரசன், உதவியாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர், வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) மற்றும் திரு.இளவரசன், உதவியாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், அரசு வாகனம் TN-73-G-0136 பொலிரோ ஜீப்பிற்கு எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள புஞ்சை நிலங்களை விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்காக/குடியிருப்பு மனைப் பிரிவுகளாக மாற்ற கள ஆய்வு செய்து தடையில்லா சான்று வழங்க மனைப்பிரிவு உரிமையாளர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி இலஞ்சமாக பணத்தை வசூல் செய்த திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர்/ வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு), இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் திரு.இளவரசன், உதவியாளர், வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம், இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோர் மீது தக்க சட்ட ரீதியாக

மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு 08.07.2024 ஆம் தேதி சுமார் 07.00 மணிக்கு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து, என்னுடைய புகாருடன், கடந்த 06.07.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டம் வேளாண்மை துணை இயக்குனர், வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு), இராணிப்பேட்டை என்பவரது அரசு வாகனம் TN-73-G-0136-த்தை தடுத்து நிறுத்தி பகல் சுமார் 12.10 மணிக்கு இராணிப்பேட்டை மாவட்டம் வேடல் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள அழகர் நகர் மனைப்பிரிவிற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்து அரக்கோணம் அரசு மருத்துவமனையில் உள்ள Police Outpost-ல் வைத்து மேற்கொள்ளப்பட்ட செயல்முறை, மேற்படி சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.தபேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர்/ வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு), திரு.இளவரசன், உதவியாளர் மற்றும் திரு.யுவபிரகாஷ், ஆக்டிங் டிரைவர் ஆகியோரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.1,26,000/-ஆகியவற்றை மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சமர்ப்பிக்கிறேன். Sd/- XXXXXXX (வை.பூமா), 8/7/2024 துணை ஆய்வுக் குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், வேலூர் மாவட்டம்.

Sir, Received the complaint on 08.07.2024 at 07.00 hrs and registered a case in Ranipet V&AC Cr.No:03/2024 U/S 7 of Prevention of Corruption Act 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act 2018 on 08.07.2024 at 09.30 hrs. Sd/- xxxxxxxx (V.Ganesan), 08/07/2024 Dy.Supdt.of Police, V&AC., Ranipet District.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM / Special Judge, Ranipet and other copies sent to the Officers concerned.

08/07/2024

Dy. Supdt. of Police
V & A.C., Ranipet,
Ranipet Dist.,